33—

திருத்தங்கலுக்கு குடிநீர் வழங்கல்

*9853 – திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) திருத்தங்கலுக்கு ஆணைக்குட்டம் நீர்த்தேக்சத்தில் இருந்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆணைக்குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து திருத்தங்கல் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்காக தரச் சோதனை நீர் கொடுதிறன். (YEILD) ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் முடிந்ததும் திருத் தங்கலுக்கு குடிநீர் வழங்க தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப் ப்டும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், கொடை வள்ளல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 14-ஆம் தேதி, நடந்த பட்டாசு விபத்திலே இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் பத்து ஆயிரமும், காயம் பட்டவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் ஐந்து ஆயிரமும் கொடுத்ததற்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்சமயம் திருத்தங்கல் பேரூராட்சியிலிருந்து சுமார் ஆறு லட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சிறுசேமிப்பு நிதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்தத் திட்டம் இந்த மாதமே நிறைவேற்றித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் நிலவுகிற குடிநீர்ப் பற்றாக்குறைக்கு முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கை எடுத்து, குடிநீர் வழங்கவேண்டும் என்று தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி தற்போது மிகவும் வறட்சியாக இருக்கும் இடங்களுக்கு ஆணைக்குட்டம் திறந்த வெளிக் கிணற்றிலிருந்து 2,200 மீட்டர் நீளத்திற்கு, ரூபாய் 3 லட்சம் செலவில், நீர் ஏற்றுக் குழாய்கள்

1992 செப்டம்பர் 22]

பதிக்கவும் வேலைகள் 29–4–1992 துவக்கப்பட்டு, 29–7–1992-ல் முடிக்கப்பட்டது. பின்னர் தரச் சோதனையும் பரிசோதிக்கப்பட்டது. 24—8—1992 அன்று ஒப்படைக்கப்பட்டு, 24—8—1992 முதல் திருத்தங்கல் பேரூராட்சிக்கு தினமும் 2.20 லட்சம் லிட்டர் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 34, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

34—

சைதாப்பேட்டை மடுவங்கரை பகுதி மக்களுக்கு பாலாற்றுத் தண்ணீர்.

*10060—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதாப்பேட்டை மடுவங்கரை பகுதி மக்களுக்கு மேல் நிலை தண்ணீர் தொட்டி அமைத்து பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மடுவங்கரையில் மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்து பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் நகராட்சி மடுவங்கரைக்குப் பக்கத்திலே இருக்கிற காரணத்தாலும், மடுவங்கரை குறைந்தது 40 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், தினந்தோறும் குறைந்தது 32 டாங்குகளுக்கு, லாரிகள் மூலமாக தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தாலும், தினசரி ரூ.1170 செலவு ஆகிறது. மாதக் கணக்கைப் பார்த்தால் ரூ.35,100 செலவாகிறது. வருடத்திற்கு ரூ. 4.21 இலட்சம் செலவாகிறது. 10 வருடங்களாக இதே நிலையை மேற்கொண்டிருப்பதால், வருடத்திற்கு ரூ. 4.21 இலட்சம் செலவு செய்கிற காரணத்தால், பக்கத்திலே இருக்கின்ற ஆலந்தூர் நகராட்சியிலிருந்து பாலாற்றுத் தண்ணீரை விநியோகம் செய்து கொண்டிருப்பதால், ஒரு நிலையான திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.